**Investors Awareness Rally held on 22.9.2012 at Srimathi Indra Gandhi College, Trichy**

**Organiser: Dr. M. SELVAM**

# Dinamalar, Tiruchirappalli Edition, Dated: 14.09.2012, Page No.: 16

தினமலர் 14/09/12. வெள்ளிக்கிழமை

## முதலீட்டாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி: 22ல் நடத்துகிறது பல்கலை.

திருச்சி, செப். 14-

திருச்சி பாரதிதாசன் பல்கலையில் முதலீட்டாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி வரும் 22ம் தேதி நடக்க உள்ளது.

இதுகுறித்து பல்கலை., வணிகவியல் மற்றும் நிதிக் கல்வியியல் துறை தலைவர் செல்வம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை, இந்திரா காந்தி மகளிர் கல்லூரி மேலாண்மை துறை மற்றும் தேசிய பங்குச் சந்தை இணைந்து வரும் 22ம் தேதி முதலீட்டாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தவுள்ளது. அன்று மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை நிகழ்ச்சி நடக்க உள்ளது.

பங்குச் சந்தை முதலீடுகள் குறித்த முதலீட்டாளர்களின் பல்வேறு வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி அமையும். வெர்டெக்ஸ் செக்யூரிட்டீஸ் துணைத் தலைவர் அருள்ராஜன் முதலீட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்கவுள்ளார். நிகழ்ச்சிக்கு 100 முதலீட்டாளர்கள் மட்டும் அனுமதிக்கப்படவுள்ளனர். நுழைவுக் கட்டணம் இல்லை. கலந்து கொள்ள விரும்பும் முதலீட்டாளர் பெயர், முகவரி, தொலைபேசி, செல்போன் எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை உள்ளடக்கிய விண்ணப்பங்களை முழு வெள்ளைத் தாளில் அனுப்பலாம்.

வரும் 19ம் தேதிக்கு முன்னதாக பதிவு செய்ய வேண்டும். முதலில் விண்ணப்பிப்பவர்கள் முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர். தேர்வு செய்யப்பட்டவர்கள் எஸ்எம்எஸ் மூலம் அழைக்கப்படுவர்.

மேலும் விபரங்களுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதி கல்வியியல் துறை தலைவரை அணுகலாம். தொலைபேசி எண் 0431-2407029 மற்றும் செல்போன் 94430-25112. மின்னஞ்சல் drmselvam@yahoo.co.in.